BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# போதமலை மலைவாழ் மலையாளி இனமக்களின் மருத்துவ முறைகள்

**முனைவர் க. சக்திவேல்**
தமிழ்த்துறைத் தலைவர், செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
நாமக்கல், மின்னஞ்சல்: sakthipoongs@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மக்களிடையே எவ்வளவோ நாகரிகம் வளா;ந்தபோதிலும்கூட போதமலையில் வாழும் மலையாளியின மக்கள் தங்கள் முன்னோர்கள் பயன்படுத்திய மூலிகை மருத்துவத்தையே பயன்படுத்துகின்றனர். இயற்கையில் கிடைக்கும் மரம் செடி கொடி பூக்கள் வேர்களைப் பயன்படுத்தி தங்களுக்கான மருந்துகளை தயாரித்துக் கொள்கின்றனர். ஒரு தலைமுறை மற்றொரு தலைமுறையினர்க்கு மந்திரங்களை கற்றுக்கொடுத்து நோய்களை குணப்படுத்தும் முறையை இன்றளவும் போதமலையில் காணலாம்.

**குறிச் சொற்கள்:**

போதமலை, நாட்டுப்புற மருத்துவம், மருத்துவம் பயன்படுத்தும் முறை, மூலிகை, மரப்பட்டை, துடைப்பம், துண்டு,தொட்டாங்குச்சி, இரும்புத்துண்டு.

## முன்னுரை

உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு மலைகளிலும் பல்வேறு வகையான மலையின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவில் உள்ள மலைகளில் பெரும்பாலான மலைகள் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையைக் கொண்டு விளங்குகின்றன, தமிழ்நாட்டில் கொல்லிமலை, பச்சைமலை, பாலமலை, கல்வராயன்மலை, ஏற்காடுசேர்வராயன்மலை, நீலகிரிமலை, சித்தோPமலை எனப் பல மலைகளில் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்வகையில் போதமலையில் வாழும் மலையாளி இனமக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து மீள கையாளும் மருத்துவமுறைகளை விளக்குவதாக இவ்வாய்வுரை அமைகிறது.

## போதமலை அறிமுகம்

நாமக்கல் மாவட்டம் வென்னந்தூ வட்டத்தில் போதமலை அமைந்துள்ளது. வடுகத்திலிருந்து சுமா்2 கி.மீ. தொலைவில் உள்ளது. போதமலையில் வாழும் பழங்குடியினா் மலையாளிகள் என அழைக்கப்படுகின்றனா். இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என ஏறத்தாள 7000 க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனா். 2 கிராமங்களை உள்ளடக்கியதாக இம்மலை அமைந்துள்ளது. போத மலைவாழ் மக்கள் மூலிகை, மாந்திரிக மருத்துவ முறையை கையாளுகின்றனா்.

## மூலிகை மருத்துவ முறை

இப்பூமியில் மனித இனம் தோன்றிய போதே நோய்களும் தோன்றிவிட்டன. அந்நோயினை களைய முற்பட்ட மனிதன் அதற்கான மருந்தினைக் கண்டறிய இயற்கையாக கிடைக்கும் மூலிகைகளைத் தேடியதன் விளைவாகத் தோன்றியதே மூலிகை மருத்துவ முறையாகும். ‘மூலிகை’ என்பதற்கு மருந்து மருந்துவோ;, செடிகொடி என பலபொருள்கள் உண்டு. மூலிகை இதில் மூலி என்பதற்கு கிழங்கு, மருந்து பூண்டு, வேருள்ள மூலிகை என்றும் ‘கை’ என்பதற்கு ஒழுங்கு, ஒழுக்கம் செய்கை, செயல், கைத்தொழில், மெய்நிலை என்றும் பொருள் கூறுகிறது கழகத் தமிழகராதி.

எனவே மருத்துவத்திற்கு பயன்படும் மரங்கள், செடி,கொடிகள் இலைகள், பூக்கள், விதைகள், வோ;கள் ஆகிய அனைத்தையும் மூலிகைகளாகக் கொள்ளலாம். மேலும்

உயிரினங்களின் நோய்களைக் களைய மூலங்களாகத் திகழும் அனைத்து மூல பொருட்களையும் மூலிகை என்று கூறலாம்.

**நோய்களும் மருத்துவ மூலிகையும்**

நோய் என்பது ‘உடல்நலம்’ ‘மனத்துன்பம்’ என்று இருவகைப்படும். நோயானது உடல், மனம் என்ற இரண்டுடனும் தொடர்புடையது. இவற்றுள் எது ஒன்று பாதிக்கப்பட்டாலும் நோய் உண்டாகும். நம் முன்னோர்கள் முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர்கள் அந்த அனுபவ அடிப்படையில் பெரும்பாலான நோய்கள் வருவதற்கு மூல காரணங்களைக் கண்டுபிடித்து அதனை அகற்றும் வழிமுறைகளை நம் அன்றாட வாழ்வோடு இணைத்துவிட்டனர். போதமலைவாழ் மக்கள் தங்கள் நோய்களைத் தீர்ப்பதற்காகச் சிறந்த மருத்துவ முறைகளைக் கையாண்டு வருகின்றனர். எளிய முறையில் குறைந்த செலவில் நிறைந்த பலன் பெறுகின்றனர். பின்விளைவுகளற்ற நல் மருந்தைப் பயன்படுத்தி இனிய வாழ்வைப் பெறுகின்றனர். இவர்கள் பயன்படுத்தும் மருத்துவ முறைளைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்;.

**உடம்புக்கு வெளியே பயன்படுத்தும் மருத்துவமுறைகள்**

பாதங்களில் முட்கள்ஏறி ஆனி விழுந்தால் நல்லெண்ணெய்யில் மண்விளக்கேற்றி பருத்திநூலலான திரியை எண்ணெய்யில் நனைத்து கள் உப்பு அரைத்து அதன் மீது தூவி கருப்பட்டி சீவி திரியிலிட்டு பற்ற வைத்து சூடுபொறுக்க கால்ஆனியின் மீது வைத்தால் குணமாகும். உடம்பில் வெட்டுகாயம் ஏற்பட்டால் உள்ளிமுள் இலையை அறைத்து பூசினால் காயமானது நீங்கும். சிறுகுறிஞ்சான் இலையை தினமும் சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் குறையும்.

குதிங்கால் வாதம் நோய்க்கு எருக்கு இலையில் விளக்கெண்ணெய் தடவி சூடானசெங்கல் மீது வைத்து குதிங்கால் வீக்கத்தில் வைத்தால் நோய் நீங்கும். சேற்றுப்புண் குணமாக எருமையின் சிறுநீரில் காலை கழுவி கருவேலங் கொழுந்துடன் மஞ்சள் அறைத்து பூசினால் நோய் நீங்கும். முகத்தில் பரு ஏற்பட்டு இருந்தால் துளசி இலையோடு கற்பூரம் சேர்த்தரைத்து முகத்தில் உள்ள பருமேல் பூசிவந்தால் பரு மறையும்.

**உள்ளுக்குள் கொடுக்கும் மருந்துகள்**

ஜன்னி நோய் ஏற்பட்ட குழந்தைக்கு கை, கால் வளிப்பு ஏற்படும். வாயில், நுறை ததும்பும் இதை கண்ட மக்கள் அந்நோய்க்கு உரிய மூலிகையை கண்டறிந்தனர். நாணாகொழுந்து அறைத்து கருப்பு வெத்தலை, ஓமம் இரண்டையும் சேர்த்து அரைத்து பிழிந்து ஒரு சங்கடை சாறு கொடுத்தால் ஜன்னி நோயானது நீங்கும். திருமணமான பெண்கள் கர்ப்பம் தாpத்தவுடன் எந்தவிதத் தொல்லைகளும் பிணியும் நேராமல் இருக்க ஒற்றைச் செம்பருத்திப் பூவினை ஒரு மண்டலம் மருந்தாக சாப்பிட்டுவந்தால் பிரசவ காலங்களில் சுகப்பிரசவம் ஏற்படும்.



கள ஆய்வில்- ஆய்வாளர் மற்றும் தகவலாளி

கல்லீரல் நோய்க்கு வாழைத் தண்டையும், வாழைக்கிழங்;கையையும் இரவு வேளையில் தினமும் இடைவிடாமல் ஒருவாரம் சாப்பிட்டால் நோய் நீங்கும். தாய்மையடைந்த பெண்கள் குழந்தை பிறந்தபின் தாய்ப்பாலின் அளவு அதிகரிக்க பால் பெருக்கி இலையை அரைத்துக்குடித்தால் தாய்ப்பால் பெருக்கும். இதய நோய்க்கு செம்பருத்தி பூவை காச்சி அதை வடிகட்டி 50 மில்லி குடித்தால் நோயானது குறையும். நிலாபிறை (ஆவாரம் பூ) பூவின் மகரந்தத்தை காயவைத்து அதை தூளாக்கி தினமும் வெள்ளாட்டுப்பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் புற்றுநோய் மற்றும் சர்க்கரை நோய் குறையும். பெண்களுக்கு மாதவிலக்கின் போது வயிற்று வலி ஏற்பட்டால் வேப்பிலையை உரலில் போட்டு இடித்துச் சாறினை எடுத்து இதனை வெள;ளைத் துணியால் வடிகட்டி குடிக்க வேண்டும் பின் கொத்தமல்லி காப்பி குடித்தால் வலி குறையும்.

**மாந்திரிக மருத்துவம்**

மாந்திரிகம் என்பது மந்திரமுறையை குறிக்கும். மந்திரம் என்பதற்கு தொல்காப்பியர்,

*“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப”*
*(தொல். செய். 490)*

மக்கள் தோன்றிய நாளிலிருந்து மந்திரச்சடங்கு, மருத்துவமுறைகளும் தோன்ற ஆரம்பித்துவிட்டன. அந்தவகையில் போதமலை மக்களிடத்தில் காணப்படுகின்ற மந்திர மருத்துவமுறைகளை காணலாம்.

**மந்திரம்**

மனித உடம்பில் தோன்றும் நோய்களுக்கு மந்திரம் சொல்லிப் பாடம் அடிப்பதால் (சிறகடித்தல்) நோய் குணமாகும் என்று மக்கள் நம்புகின்றனர். ஒரு சொல்லையே திரும்பத்திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்தால் அந்தச் சொல்லையே அவர்கள் உச்சரிப்பார்கள். பெரும்பாலும் கோயில் பூசாரிகள், ஜோசியர் (அல்லது) மந்திரவாதிகளே மந்திரித்தல் நிகழ்வினை நிகழ்த்துகிறார்கள். “சமயங்கள் தோன்றுவதற்கு முன்னுள்ள நிலையை மந்திர ஆற்றலின் நம்பிக்கைமிக்க காலகட்டமாகக் கருதுவர்” என்று டாக்டர் சு.சக்திவேல் கூறுகின்றார். “மந்திரச் சொற்களை வாய்க்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டு மந்திரித்தலே மந்திரித்தல்” என்று மேலூர் சரவணன்(வயது 65) கூறுகிறார். “மந்திரச் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லும்போது அதில் ஆற்றல் பெறுகிறது” என்று ஞானசேகரன் கூறுகிறார். (1987, ப.3) மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் குறிப்பிடும்போது சீனா, திபெத் நாடுகளில் உள்ள புத்தபிக்குகள் மந்திரங்களை உச்சரித்து அவற்றிற்கு ஆற்றலைத் தருகின்றனர். அம்மந்திரங்களில் இடம்பெறும் சொற்களின் ஆற்றல் அவர்தம் அகக் கண்ணில் வண்ண வண்ண ஒளிப்பிழம்பாக உருவெடுக்கின்றன என்கிறார். மந்திரத்தால் மருத்துவமுறையை இரண்டு வகையாக பகுக்கலாம்.

1. நன்மை பயக்கும் மந்திரம் (தூய மந்திரம்)
2. தீமை பயக்கும் மந்திரம் (தீயமந்திரம்)

**நன்மை பயக்கும் மந்திரம்**

மந்திரச்சொற்களும் மந்திரமுறைகளும் ஒரு குழு அல்லது ஒரு சமுதாயம் முழுவதின் நலனுக்காக பயன்படுமானால் அது நன்மை பயக்கும் மந்திரம் எனப்படும்.

**தீமை மந்திரம்**

ஏவல், பில்லி, சூனியம் போன்றவைகளுக்கு துஷ்ட ஆவி அல்லது குட்டிச்சாத்தானை ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு எதிராக ஏவுவதால் ஒருவனை நோய் வாய்ப்படும்படி அல்லது உடல் ஊனமடையும்படி செய்தல் பிறரை வசியம்பட செய்தல் தீமை மந்திரம் எனப்படும். இதனை,

*“ஓன் பகவதி ஆதிகவாயூ*
*ரொசிக்காரி மகாமுனி*
*ஐயம் கிளியும் சபம்*
*அரசனே கல்யாணி*
*நாராயண தேவி*
*வீரலட்சுமி வாகினி மாந்திரி*
*மோசித் என்று*
*இந்நார்இந்நார்என் வசம் ஆக’*

என்று கூறுகிறார் மேலூர் ராஜி(வயது60).

நன்மை சார்ந்த மருத்துவத்தை இரண்டாக பிரிக்கலாம்.

1. மருத்துவம் சார்ந்தது
2. வாழ்வியல் சடங்குடன் சார்ந்தது

மக்கள் தங்கள் நோய்களுக்கு தெய்வத்தின் சினம், தீய ஆவிகளின் செயல் என்று நினைத்து கோயில் பூசாரியையோ, மந்திரவாதியையோ, ஜோசியரையோ நாடிச் செல்லுதல். பொதுவாக பாம்பு, பூரான், தேள் போன்ற விஷக்கடிகளுக்கு பாடம் போடுகிறார்கள்.

**பாடம் போடுதலுக்கு பயன்படுத்தும் கருவிகள்**

துண்டு, சீமைகுச்சி, வேப்பிலை, வெள;ளை எருக்கன்குச்சி போன்றவற்றை கருவிகளாக பயன்படுத்துகின்றனர். விஷக்கடிகளுக்கு எந்தநேரத்திலும் பாடம் போடுகின்றனர்.

**வெண்ணெய் மந்திரித்தல்**

நமது காலில் அல்லது கையில் முள் ஏறிவிட்டால் அதனை வெடுக்கென்று பிடுங்கும்போது முள் உள்ளே இருக்கும், அதை களைய முடியாது ஆதலால் பசுவின் வெண்ணெய் கொண்டு மந்திரவாதியிடம் கொடுத்தால் அவர் இறைவனை வேண்டி மனத்திற்குள்; மந்திரங்களை முணுமுணுத்து வெண்ணெய் எடுத்து வெற்றிலையில் தடவி முள் உள்ள இடத்தில் சிறிது சதையைக் குத்தியெடுத்து வெண்ணெயை வைத்துக் கட்டுவர் அதனால் முள்ளானது தானே

வெளியேவரும் என்று வெங்கட்ராமன் வயது 80 கூறுகிறார்.

**திருநீறு மந்திரித்தல்**

குழந்தைகள் அழுது கொண்டே இருந்தால் அல்லது காய்ச்சல் ஏற்பட்டால் திருநீறு மந்திரித்துப் போடுவதால் குணமாகும் ராஜி 85 வயது என்று கூறுகிறார்

**உப்பு மந்திரித்தல்**

முருங்கைக் கீரையையும், உப்பையும் அரைத்து வெந்நீரில் கலந்து மந்திரித்துக் கொடுத்தலே உப்புமந்திரித்தல் என்று கூறுவர். அதாவது மனிதனுக்கு புளிஏப்பம் எடுத்தல், வயிறு பசிக்காமல் போதல் போன்ற நோய்கள் நீங்க இதைச்செய்கின்றனர். உடலில் தோன்றும் நோய்களுக்கு மந்திரவாதி அல்லது பூசாரி மந்திரங்களை முணுமுணுத்து மந்திரம் சொல்கின்றனர். இந்த முறையில் நோயாளி இல்லாமலேயும் மந்திரித்தலை மேற்கொள்கின்றனர்.

**எந்திரம் மந்திரித்தல்**

எந்திரம் மந்திரித்துக் கட்டுதலை தாயத்துக் கட்டுதல் என்றும் கூறுவர். அதாவது நம்மை தீய ஆவிகள் பேய், பிசாசு தீண்டினாலும் அண்டினாலும் தனக்கு ஏதாவது தீங்கு நோ;ந்தாலும் நோயை குணப்படுத்தும் என்று மக்கள் எந்திரத்தை மந்திரித்து கட்டுகிறார்கள். (மேலூர், ராமன் -75) என்பதை அறியமுடிகிறது.

இதை கட்டும்போது சுத்தமாகவும், குறிப்பிட்ட சமூக மக்களுக்கு தன் கையால் தண்ணீர்ஊற்றாமலும், இறந்தவர்வீட்டிற்குச் செல்லாமலும் இருக்;க வேண்டும். காலை மாலை நேரங்களில் எந்திரம் கட்டுகின்றனர்.

**கயிறு மந்திரித்தல்**

இரவில் தனியே நடக்கும் போது பயந்து கொள்ளுதல், எதையாவது கண்டு மிரளுதல் இதனால் உடல் நடுங்கி காய்ச்சல் ஏற்படுதல் இது போன்ற நிகழ்வின் போது கயிறு மந்திரித்துக் கட்டப்படுகிறது. கயிறு மந்திரித்தலுக்கு கயிறு (கருப்பு, சிகப்பு) பூசைப் பொருட்களும் கொண்டு செல்லவேண்டும்.

கண்ணேறு கழித்தல்

கண்ணேறு கழித்தல் என்பது சிலரது தீய பார்வைகள் குழந்தைகள மீது ஆட்பட்டால் உடல் நலக்குறைவு உண்டாகும் என்று மக்கள் நம்புகின்றனர். இதனை கண்ணேறுபடுதல் என்கின்றனர். இது கிராமப்புறங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் கடைப்பிடிப்பர். இது வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேரங்களில் ஒரு படி எடுத்து அதில் உப்பு, வறமிளகாய், கடுகு, சீமதுடைப்பம்குச்சி ஆகியவை ஒன்றாக போட்டு வலது, இடது புறங்களில் வலதுகையைச் சுற்றி வரும்போது,

*கொள்ளிக்கண்ணு பொடோரென்று வெடிக்கட்டும்*

*பாம்புக்கண்ணு படீரென்று வெடிக்கட்டும்*

என்று தீயில் போட்டு மூன்று முறை தூ….தூ….தூ…. என்று துப்பி நெட்டை முறிப்பர். மேலூர் சடையன்(வயது- 80) கூறுகிறார். மேலும் வேங்கைமரப் பாலை தொட்டியில் பிடித்து சிறு இரும்புத்துண்டை அதில் போட்டு ஊரவைத்த அந்த மைப்பொட்டினை நெற்றி, கண்ணம் தாவாக்கொட்டை, இரு கைகள் மற்றும் இரு கால்களில் இட்டு வர கண்ணேறு ஏற்படாது.

**ஏடு எழுதுதல் (சீட்டு கட்டுதல்)**

குழந்தைகளுக்கு பாலகிரக தோசத்திற்கு ஏடுகட்டி எழுதினால் குணமாகும் என்று மக்களிடத்தில் நம்பிக்கை உள்ளது. குழந்தைகளுக்குக் காய்ச்சல் வருதல், கண்சொருகிவிடுதல் உதடு வறண்டு காணப்படுதல், கண்சூட்டு முடி தனித்தனியாய் நிற்றல் மேற்பார்வை பார்ப்பது பாலகிரக தோசத்திற்கு அறிகுறிகளாகும். ஏடுகட்டினால் இந்நோய் நீங்கும் என்று இம் மக்கள் நம்புகின்றனர்.

**முடிவுரை**

அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்தபோதிலும்கூட போதமலையில் வாழும் மலையாளியின மக்கள் தங்கள் முன்னோர்களின் பண்பாட்டினையும் பழக்கவழக்கங்களையும் தொடர்ந்து மேற்கொண்டுவருவதும், இயற்கை மருத்துவ முறையிலேயே நோய்களை குணப்படுத்தும் முறையை கையாளுவதை நம்மால் அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. கழகப்புலவர்குழுவினர் (தொகுப்பு), கழகத்தமிழ் அகராதி திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புப் கழகம், திருநெல்வேலி, 1964

2. சக்திவேல், டாக்டர் சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 104,
3. ஞானசேகரன், முனைவர் தே., மக்கள் வாழ்வில் மந்திர சடங்குகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை- 600 050, 2005
4. திருஞானசம்பந்தம், பேராசிரியர் ச., தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு - 613 204, 2020

**தகவலாளிகள்**

1. போதமலை- வெங்கட்ராமன்(வயது -70)
2. மேலூர் - சடையன்( வயது- 80)
3. மேலூர் – ராஜி (வயது-75 )

*****